**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**OS. No.189/2021**

**14.10.2025**

**P.W.1- பாரதிதாசன்**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

பாகப்பிரிவினை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் 2 பத்திரங்கள் செல்லாது என பரிகாரம் கேட்டுள்ளேன். நான் 5 பத்திரங்கள் செல்லாது என பரிகாரம் கேட்டதற்கு நீதிமன்ற கட்டணம் முறையாக செலுத்ததாக காரணத்தினதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தானது எனது அப்பாவுக்கு கிரைய பாத்தியப்பட்ட சொத்தாகும். அவர் உயிருடன் இருக்கும் வரை அவர் தான் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். எனது தந்தைக்கு 3 ஆண்பிள்ளைகள், 4 பெண் பிள்ளைகள் என மொத்தம் 7 பிள்ளைகள் ஆவார்கள். எனது அம்மா பெயரில் எனது தந்தை சொத்துக்களை கிரையமாக வாங்கி கொடுத்துள்ளார். எனது அம்மா பெயரில் உள்ள கிரைய சொத்துக்களை 4 பெண் பிள்ளைகளுக்கு எனது அம்மா எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. எனது தந்தை உயிருடன் இருக்கும்போதே வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டோம். அவ்வாறு எந்த பாகப்பிரிவினையும் செய்யாமல், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது அம்மா பெயரில் உள்ள சொத்து எனது 4 சகோதரிகளுக்கும் தான பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான், ஆனால் பாகமாக எழுதிக்கொடுத்தார். தாவா சொத்திற்கும், தானம் கொடுத்த சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. எனது தந்தை இறந்த பிறகு தாவா சொத்தை 7 பேர்களும் கூட்டாக அனுபவம் செய்து வந்தோம் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை 3 மகன்கள் மட்டும் வைத்துக்கொள்ளுங்கள் என எனது தந்தை எழுத்துபூர்வமான எழுதிக்கொடுக்கவில்லை, வாய்மொழியாக தான் சொன்னார். தாவா சொத்திற்கும் மேற்படி 7 பேர்கள் பெயரில் கூட்டுப்பட்டா இருந்தது என்றால் சரியல்ல. பெண் பிள்ளைகளுக்கு பாத்தியப்பட்ட 4/7 பங்கை 7ம் பிரதிவாதியான எனது

அண்ணன் மனைவி செல்விக்கு கிரையப்பத்திரம் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி செல்வி 1 ஏக்கரை தனது நாத்தனார்களான 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு 4 பத்திரங்கள் மூலம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி 5 பத்திரங்கள் சட்டப்படி செல்லத்தக்கவை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் 1/3 பாகம் கேட்க உரிமையில்லை என்றாலும், 1/7 பாகம் கேட்க தான் உரிமையுள்ளது என்றால் சரியல்ல. எங்களுக்கு வீடு, காலியிடம் உள்ளது என்றால் சரிதான். அவைகள் பிரிக்காமல் கூட்டாகத்தான் உள்ளது என்றால் சரிதான். ஏன் மேற்படி சொத்தை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் வாய்கரலாக பிரித்துக்கொண்டதால் சேர்க்கவில்லை, எழுத்துபூர்வகமான பிரிக்கவில்லை என்றால் சரிதான். வாய்மொழியாக எந்த பிரிவினையும் ஏற்படவில்லை என்றாலும் மேற்படி சொத்தை சேர்க்காத காரணத்தினால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் பிரதிவாதிகளின் ஆவணங்கள் என்பதால் அவைகளை வைத்து நான் எந்த உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.10.14 17:19:10 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.